பக்கங்கள் 22+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 17 ஞாயிற்றுக்கிழமை 01.03.2026 | அதிர்வு 214

## மத்திய கிழக்கு பதற்றம்: விமான சேவைகள் இரத்து!



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மற்றும் வான்பரப்புகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதன் காரணமாக, இன்று அங்கு 06▶

‘கனடா முரசு’ இ[illegible]கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டுத் தாக்குதலில்

# ஈரானின் உச்ச தலைவர் கமேனி படுகொலை!

## தரைமட்டமானது தெஹ்ரானின் அதிகார மையம்

- பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கதறல்
- 40 நாள்கள் துக்கம் அனுஷ்டிப்பு

மத்திய கிழக்கையே அதிர வைக்கும் ஒரு பாரிய இராணுவத் திருப்பமாக, ஈரானின் உச்ச அதிகாரத் தலைவரான அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் இணைந்து நடத்திய அதி பயங்கர வான்வழித் தாக்குதலில், தெஹ்ரானின் இதயப் பகுதியில் இருந்த அவரது பாதுகாப்பான வளாகம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை ஈரானின் உத்தியோகபூர்வ அரச ஊடகமான ஐ.ஆர்.என்.ஏ. உறுதிப்படுத்தியுள்ளதுடன், உலக வல்லரசு நாடுகள் அனைத்தும் பெரும் அதிர்ச்சியில் உறைந்துள்ளன. 06▶



# மனித உரிமை மீறல்கள் குறித்து முறையான விசாரணை நடக்கும்

## நீதி அமைச்சர் ஹர்ஷன உறுதி



இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கள் தொடர்பில், எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சட்டத்தின் அடிப்படையில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நோர்வே நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போது, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இலங்கையின் நிலைவரம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தார். குறிப்பாக, வடக்கு – கிழக்கில் நில அபகரிப்பு, இராணுவமயமாக்கல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி புதைகுழி விவகாரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு வெளிப்படையான விசாரணைகளை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஊடகங்களுக்கு விசேட விளக்கமளித்துள்ளார்.

அமைச்சரின் விளக்கத்தில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:–

“செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட கடந்த காலப் பிரச்சினைகள் குறித்துச் சட்ட ரீதியான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். இதில் அரசியல் தலையீடுகள் எவையும் இருக்காது. உண்மைகளைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசு உறுதியாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் வசமுள்ள மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை. இராணுவமயமாக்கல் தொடர்பான கவலைகளுக்குச் செயல்முறை ரீதியான தீர்வுகள் எட்டப்படும்.

வடக்கு – கிழக்கில் மதத் தலங்கள் தொடர்பாக நிலவும் சர்ச்சைகள் மற்றும் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. அனைத்து இன மக்களும் எவ்வித அச்சமுமின்றித் தமது மதங்களைப் பின்பற்றுவதற்கான சமத்துவமான சூழல் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் எழுப்பும் நியாயமான கேள்விகளைப் புறக்கணிக்காது, அவற்றுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்படும். குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேச இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களை ஆற்ற வேண்டியதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பதிலளிக்க வேண்டியதும் அரசின் தார்மீகப் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், இதற்காக ஏற்கனவே உள்ள பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டு, தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார்.

# கம்பஹாவில் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது!



கம்பஹா, திவுலப்பிட்டிய பிரதேசத்தில் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே இவர்கள் இருவரும் பிடிபட்டுள்ளனர். இவர்களிடமிருந்து விற்பனைக்காக வைத்திருந்த ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயர்கல்வி கற்கும் இளைஞர்கள் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்டுள்ளமை அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், இவர்களுக்குப் பின்னால் உள்ள போதைப்பொருள் விநியோக வலையமைப்பு குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி

# அன்று வீதியில் இறங்கிய பேராயர் இன்று எங்கே?

### மொட்டுக் கட்சி பகிரங்க விமர்சனம்




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரத்தில், பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தற்போது மௌனம் காப்பது ஏன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேள்வி எழுப்பியுள்ளது.

அக்கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ குட்டியாராச்சி இது குறித்து ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனதான் நடத்தியது என்பது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முப்பது வருட காலப் போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்த தலைவரைக் கொண்ட எமது கட்சிக்கு, குண்டுகளை வைக்க வேண்டிய எந்தவொரு தேவையும் கிடையாது.

தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிந்து கைது செய்வோம் என்று தேசிய மக்கள் சக்தியினர் மேடைகளில் முழக்கமிட்டனர். தற்போதைய அரசு அந்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

எமது ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வீதியில் இறங்கிப் போராடினார். ஆனால், புதிய அரசு பதவியேற்ற பிறகு அவர் மௌனமாக இருக்கின்றார். பேராயர் மீண்டும் வீதிக்கு வந்து, தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்குமாறு இந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி விசாரணைகளைத் தீவிரப்படுத்தி உண்மைக் குற்றவாளிகளை அரசு வெளிப்படுத்த வேண்டும்." - என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

# களுத்துறை கடலில் மூழ்கி 17 வயது மாணவன் மாயம்!

### தேடுதல் பணிகள் தீவிரம்



களுத்துறை, கட்டுக்குருந்த கடற்பரப்பில் நீராடச் சென்ற 17 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் இராட்சத அலையில் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளார் என்று களுத்துறை தெற்கு தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரியின் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் பயின்று வரும், களுத்துறை நாகொடை பகுதியைச் சேர்ந்த லினாஷ் தேவமிக (வயது 17) என்ற மாணவனே இவ்வாறு மாயமாகியுள்ளார்.

மேற்படி மாணவன் நேற்று மாலை தனது நண்பர்கள் மூவருடன் இணைந்து பொழுதுபோக்குக்காக கட்டுக்குருந்த கடற்கரையில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்த போது, திடீரென உருவான பலத்த இராட்சத அலையில் சிக்கிய மாணவன், நண்பர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இதன்போது நண்பர்கள் கூச்சலிட்டதை அடுத்து அங்கிருந்தவர்கள் உதவ முற்பட்டும், மாணவன் கடலில் அடித்துச் செல்லப்பட்டார்.

மாணவன் மாயமானதையடுத்து, பிரதேச மக்களும் மீனவர்களும் இணைந்து கடலில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், கடற்படையினரின் உதவியுடன் தேடுதல் பணிகளை விரிவுபடுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நரகத்தின் வாயில் திறப்பு

மத்திய கிழக்கில் பெரும் போர் வெடித்துள்ளது. அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டதாக ஈரான் மீது குற்றம் சுமத்தி அதனை வழிக்குக் கொண்டு வரும் மார்க்கம் என்ற பெயரில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் நேற்று திடீரென தாக்குதலை தொடங்கியுள்ளன. இதற்கு ஈரானும் கடுமையான பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளம் உள்ள குவைத், பஹ்ரைன், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஓமன், ஜோர்டான் போன்ற நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதும் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய திடீர் கூட்டுத் தாக்குதலில் கடந்த 35 ஆண்டுகளாக ஈரானை வழிநடத்தி வந்த அயதுல்லா அலி காமேனி (86 வயது) உயிரிழந்திருக்கின்றார். நேற்றைய தாக்குதல்களில் கமேனியின் மகள், மருமகன், மருமகள் மற்றும் பேரக்குழந்தை கொல்லப்பட்டனர். தெஹ்ரானில் காமேனியின் இல்லம், அலுவலகம் அமைந்துள்ள வளாகம் முற்றிலும் அழிக்கப்பட்டன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காமேனியுடன் சேர்த்து ஈரானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அஜிஸ் நசிர்சாதே, இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் தரைப்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்டோரும் கொல்லப்பட்டனர்.

உச்ச தலைவர் கொல்லப்பட்ட நிலையில், ஈரானை அடுத்து வழி நடத்தப்போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. காமேனியின் மகன் மொஜ்தபா புதிய உச்ச தலைவராக பொறுப்பேற்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. நாட்டை தற்காலிகமாக வழிநடத்த அதிபர் மசூத் பெஷ்கியான் தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், 88 பேர் கொண்ட வல்லுநர் குழு விரைவில் கூடவுள்ளதாகவும், அந்தக் குழுவே புதிய உச்ச தலைவரை தேர்வு செய்யும் என்றும்தகவல்கள்தெரிவிக்கின்றன.

அதிரடிதாக்குதல்அச்சுறுத்தல்கள் மூலமும், ஈரானின் தலைமையைத் துடைத்தழிப்பதன் மூலமும் அந்த நாட்டைத் தனது வழிமுறைக்கு - கட்டுப்பாட்டுக்கு - கொண்டு வரலாம் என்று அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டுத் தலைமைகள் கருதுகின்றன. ஆனால் அது வெற்றி அளிக்குமா என்பதுதான் கேள்வி.

நாட்டின் தலைவரான ஆன்மீக வழிகாட்டி காமேனியின் படுகொலை மற்றும் அமெரிக்க - இஸ்ரேல் தாக்குதலில் ஏற்பட்டுள்ள மிக மோசமான சேதம் போன்றவை ஈரானை அடிபணிவதற்கு மாறாக சீற்றத்தோடு எகிற வைக்கலாம் என்றும் சில அவதானிகள் கருதுகின்றனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு பதிலடி கொடுப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது. அதனை மத்திய கிழக்கில் அமெரிக்கத் தளங்கள் உள்ள நாடுகள் மீதெல்லாம் ஈரான் நடத்தத் தொடங்கியிருக்கும் தாக்குதல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

“எங்கள் இமாமின் (காமேனி) கொலைகாரர்களைப் பழிவாங்குவோம். ஈரானிய தேசத்தின் கரம் அவர்களை விடாது. அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் படைகளுக்கு எதிராக வரலாற்றிலேயே மிகக் கடுமையான தாக்குதலைத் தொடங்கியுள்ளோம். எதிரிப் படைகளுக்காக நரகத்தின் வாயில்களை நாங்கள் திறந்து வைப்போம்” என்று ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யுத்தத்தின் மூலம் உலகுக்கு நரகத்தின் வாயில் திறக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

# இழுவைப் படகுகளுக்கு ஒருபோதும் இடமில்லை!

## தமிழக மீனவர் பிரதிநிதிகளிடம் அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்



இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில், எதிர்வரும் மே மாதம் தாம் தமிழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகக் கடற்றொழில் மற்றும் நீர்வளங்கள் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். அதேவேளை, இந்திய மீனவர்களின் இழுவைப் படகு மீன்பிடி முறைக்கு இலங்கைக் கடற்பரப்பில் ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

புனித கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று சனிக்கிழமை வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்ட இந்திய நாட்டுப் படகு மீனவர் சங்கம் மற்றும் தமிழக கடல்சார் சங்கப் பிரதிநிதிகள், அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணக் கோரி மஹஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

### கட்டம் கட்டமான தீர்வு

"இலங்கை – இந்திய மீனவர் பிரச்சி னைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது, இந்த விவகாரம் குறித்து உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். இதன் தொடர்ச்சியாக, எதிர்வரும் மே மாதத்தின் பின்னர் நான் தமிழகத்திற்கு விஜயம் செய்து, இந்த விடயத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளேன். தேவையேற்படின் இந்திய மத்திய அரசுடனும் கலந்துரையாடத் தயாராக உள்ளோம்.

### இழுவைப் படகுகளுக்குத் தடை

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுப் பயன்பாட்டால் இலங்கையின் கடல்வளங்களுக்குப் பாரிய அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளது. எமது கடல்வளங் களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. எனவே, இலங் கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீன வர்கள் இழுவைப் படகுகளைப் பயன் படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீன வர்களை விடுவிப்பது குறித்து எமது நாட்டின் நீதிமன்றமே தீர்மானிக்கும். நீதித்துறை விவகாரங்களில் அமைச சினால் தலையிட முடியாது. எவ்வாறா யினும், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடு பவர்களுக்கு விதிக்கப்படும் அதிகபட்ச தண்டப்பணம் குறித்து அமைச்சு மட்டத்தில் மீளாய்வு செய்யப்படும்.

யுத்தத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கும் இராஜதந்திர ரீதியிலான முயற்சிகள் தொடரும்." – என்றார்.

# சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து இளம் யுவதி ஒருவர் பரிதாப உயிரிழப்பு!


சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித் துச் சிதறியதில், சமையலில் ஈடுபட்டிருந்த இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சோக சம்பவம் குருநாகல், கல்கமுவை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

கல்கமுவை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் யுவதியே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் தனது வீட்டின் சமையல் அறையில் மதிய உணவைத் தயார் செய்துகொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்தின் போது ஏற்பட்ட கடும் தீக்காயங்கள் காரணமாக அந்த யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



சமையல் அறையிலுள்ள எரி வாயு அடுப்பு அல்லது குழாயில் ஏற்பட்ட கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் சந்தேகிக்கப்படு கின்றது.

இது தொடர்பான விரிவான விசா ரணைகளைப் பொலிஸார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் பொலிஸார் அதிரடி வேட்டை! இரு பெண்கள் உட்பட 13 பேர் கைது!!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய 13 பேரை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விவரங்கள் வருமாறு:-

யாழ். நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றின் கதவை உடைத்து, அங்கிருந்த இரண்டு இலட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசி என்பவற்றைத் திருடிய பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, நெடுங்குளம் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து நான்கரை இலட்சம் ரூபா பணத்தைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் மூவரைத் தேடிப் பொலிஸார் வலைவீசியுள்ளனர்.

யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது,தடைசெய்யப்பட்ட போதைப்பொருள்களைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கணிசமான அளவு போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 13 சந்தேகநபர்களிடமும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

யாழ். நகரில் அதிகரித்து வரும் திருட்டு மற்றும் போதைப்பொருள் கலாசாரத்தைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் பொலிஸ் தரப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

**ஈரானின் உச்ச...**

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டி, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய போர் விமானங்கள் ஈரானுக்குள் ஊடுருவித் தாக்குதலைத் தொடங்கின. இந்த வான்வழித் தாக்குதலில் கமேனி மாத்திரமன்றி, அவரது மகள், மருமகன், பேரன் மற்றும் ஈரானின் 30 இற்கும் மேற்பட்ட உயர்மட்ட இராணுவத் தளபதிகள் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது பாணியில் ஓர் அதிரடி அறிக்கையை வெளியிட்டுள்ளார். "ஈரானியர்கள் தங்கள் நாட்டை மீண்டும் கைப்பற்றுவதற்கு வரலாற்றில் இதுவரை இல்லாத ஒரு பொன்னான வாய்ப்பை நாம் வழங்கியுள்ளோம்" என்று அவர் முழங்கியுள்ளார்.

கமேனியின் மறைவைத் தொடர்ந்து ஈரானில் 7 நாள்கள் பொது விடுமுறையும், 40 நாள்கள் துக்கமும் அறிவிக்கப்பட்டுள்ளது. தெஹ்ரானின் எங்கெலாப் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள்திரண்டு கதறிஅழுது வருகின்றனர். அதேவேளை, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிராகப் பல நாடுகளில் உள்ள ஈரான் ஆதரவாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

கமேனிக்கு அடுத்தபடியாக ஈரானை வழிநடத்தப்போவது யார் என்ற மர்மம் நீடிக்கின்றது. கமேனியின் மகன் மொஜ்தபா அதிகாரத்தைக் கைப்பற்ற வாய்ப்புள்ளதாகத் தெரிகின்றது. தற்போது நிலமையைச் சமாளிக்க அதிபர் மசூத் பெஷ்கியான் தலைமையில் அவசர குழு அமைக்கப்பட்டுள்ளது.

"இதுவரை பார்த்திராத ஒரு பதிலடியைச் சந்திப்பீர்கள்" என ஈரானின் பாதுகாப்புப் படைகள், அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளன. இதனால் வளைகுடா நாடுகள் முழுவதும் போர் மேகம் சூழ்ந்துள்ளது. ஒருவேளை ஈரான் பதிலடி கொடுத்தால், அது ஒரு முழு அளவிலான உலகப் போராக மாறக்கூடும் என்ற அச்சம் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ளது.

---

**மத்திய கிழக்கு...**

இயக்கப்படவிருந்த 12 விமான சேவைகளை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இரத்துச் செய்துள்ளது.

பயணிகளின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய வான்பரப்பு அச்சுறுத்தல்களைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அதன்படி இரத்துச் செய்யப்பட்டுள்ள விமானங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

* கொழும்பு – டுபாய்: UL 231 / UL 225
* டுபாய் – கொழும்பு: UL 232 / UL 226
* கொழும்பு – தோஹா: UL 217
* தோஹா – கொழும்பு: UL 218
* கொழும்பு – டம்மாம்: UL 253
* டம்மாம் – கொழும்பு: UL 254
* கொழும்பு – ரியாத்: UL 265
* ரியாத் – கொழும்பு: UL 266
* கொழும்பு – குவைத்: UL 229
* குவைத் – கொழும்பு: UL 230

இதேவேளை மத்திய கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகளை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருவதுடன், மேலதிக தகவல்களுக்கு அந்தந்த பயண முகவர்கள் அல்லது விமான நிறுவனத்தின் இணையத்தளத்தைத் தொடர்புகொள்ளுமாறு பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தனிநபர் கையில் அதிகாரம் ஆபத்து!

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்திட வேண்டும் என்று ரவூப் ஹக்கீம் முழக்கம்

“நாட்டில் தனிநபர் ஒருவரின் கையில் அதிகாரம் குவிந்திருப்பது சட்டத்தின் ஆட்சிக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். எனவே, 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும்” என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் 75ஆவது ஆண்டு பவள விழாவினை முன்னிட்டு நேற்று நடைபெற்ற ‘வித்தக விழா’ நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரது உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

“உலகம் முழுவதும் போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில், வல்லரசு நாடுகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அக்கிரமங்களை இழைத்து வருகின்றன. இதனால் சர்வதேச ரீதியில் சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.



இத்தகைய சர்வதேச யுத்தங்களினால் இலங்கை போன்ற சிறிய நாடுகளே பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்புகளைச் சந்திக்கின்றன. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நாம், வரும் ஆண்டுகளில் பில்லியன் கணக்கிலான கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய சவாலான நிலையில் இருக்கின்றோம்.

தற்போதைய ஆட்சியாளர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்ற வாக்குறுதியுடனேயே ஆட்சிக்கு வந்தனர். ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கையில் இருக்கும்போது அத்தகைய மாற்றத்தைச் செய்வார்களா என்பது சந்தேகமே. தமக்குக் கிடைத்துள்ள எல்லையற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் சாசனத்தில் எதேச்சதிகார மாற்றங்களைச் செய்ய முயற்சிகள் நடப்பதாகத் தெரிகின்றது. சர்வாதிகாரப் போக்கு இலங்கையில் ஒழிக்கப்பட வேண்டும்.

நீதிமன்றக் கட்டமைப்பு மற்றும் அரசியல் சாசன விவகாரங்களில் தற்போதைய ஆட்சியாளர்களின் போக்கு அவதானிக்கப்பட வேண்டியது. அரசியல் சாசனத்தில் கை வைக்கப்படும்போதும், ஜனநாயக விழுமியங்கள் மீறப்படும் போதும் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதில் சட்ட மாணவர்களும் சட்டத்தரணிகளும் முன்னிலையில் இருக்க வேண்டும். கொழும்பில் அண்மையில் சட்டத்தரணி ஒருவர் கொல்லப்பட்டபோது காட்டிய அதே வேகத்தையும் ஒற்றுமையையும் அரசியல் சாசனப் பாதுகாப்பிலும் நாம் காட்ட வேண்டும்.

மக்களுக்கு இவ்வாறான அரசியல் மற்றும் சட்ட விவகாரங்களில் தெளிவூட்டுவது சட்ட சமூகத்தின் தார்மீகப் பொறுப்பாகும்.” - என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.




# கோடரித் தாக்குதலுக்குள்ளான மூதாட்டி 16 நாள்களின் பின் பலி!

## களுத்துறையில் நேர்ந்த கொடூரம் சந்தேகநபரான இளைஞர் கைது

அண்டை வீட்டு உறவினரான இளைஞர் ஒருவரால் கோடரியால் தாக்கப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த 71 வயதுடைய மூதாட்டி ஒருவர், 16 நாள்களுக்குப் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

களுத்துறை தெற்கு, கிதுலாவ, லாகோஸ்வத்த ஜன உதான கிராமத்தைச் சேர்ந்த எச். பி. யசவதி (வயது 71) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி இக்கொடூரமான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் மூதாட்டியின் முகத்திலேயே கோடரியால் கடுமையாகத் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மூதாட்டி தனது வீட்டின் வரவேற்பறையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை அவரது மருமகள் முதலில் கண்டுள்ளார். குற்றச்செயலுக்குப் பயன்படுத்தப்பட்ட கோடரியையும் பொலிஸார் அதே இடத்திலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மூதாட்டி களுத்துறை நாகொட வைத்திய சாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, 16 நாள்கள் உயிருக்குப் போராடி வந்த நிலையிலேயே நேற்று உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை நடத்தினார் எனக் கருதப்படும் உறவினரான இளைஞர், சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும், இந்தத் தாக்குதலுக்கான துல்லியமான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.



# பருத்தித்துறைக் கடலில் மாயமான இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

## தொழிலுக்குச் சென்ற வேளை நேர்ந்த விபரீதம்





(வடமராட்சி நிருபர்)

யாழ். வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைக் கடலில் மீன்பிடி நடவடிக்கையின் போது தவறி விழுந்து காணாமல்போன தொழிலாளி, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடலுக்குத் தொழிலுக்குச் சென்றுள்ளனர். இதன் போது, அவர்கள் சென்ற படகின் இயந்திரத்தில் தூண்டில் கயிறு சிக்கியுள்ளது. அதனைச் சீர்செய்ய முற்பட்ட போது, படகிலிருந்த ஒரு தொழிலாளி எதிர்பாராத விதமாகத் தவறி கடலில் விழுந்து அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவருடன் சென்ற சக தொழிலாளி வழங்கிய தகவலைத் தொடர்ந்து, பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மீனவர்கள் உடனடியாகத் தேடுதல் பணியில் இறங்கினர். சுமார் 25 இற்கும் மேற்பட்ட படகுகளில் சிதறிச் சென்று தீவிரமாகத் தேடி வந்த நிலையில், இன்று காலை 10 மணியளவில் அந்தத் தொழிலாளியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டது.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை, கொட்டடியைச் சேர்ந்த விஜயகுமார் நிக்சன் (வயது 23) என்ற ஒரு குழந்தையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சடலம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

23 வயதான இளம் தந்தை ஒருவரின் உயிரிழப்பு பருத்தித்துறை - கொட்டடி மீனவக் கிராமத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 36 ஆயிரம் சிகரெட்டுகளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

## கட்டுநாயக்கவில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் அதிரடி

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான சிகரெட்டுகளுடன் 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்று சனிக்கிழமை இரவு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் விசேட சோதனையொன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர்



ஒருவரை வழிமறித்துச் சோதனை செய்தபோது இக்கடத்தல் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சந்தேகநபரின் உடமைகளைச் சோதனையிட்டபோது, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தி வரப்பட்ட சுமார் 36 ஆயிரம் சிகரெட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இவை அனைத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அப்பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வெளிநாட்டிலிருந்து இந்தச் சிகரெட் தொகுதியைக் கொண்டு வந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமும், கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகுதிகள் தொடர்பிலும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# தீர்வுகள் எட்டப்படாத கூட்டங்களே பிரதேச மட்டங்களில் நடக்கின்றன!

## மக்கள் அவதி என்கிறார் சாணக்கியன் எம்.பி.

மண்முனை மேற்கு – வவுணதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தாலும், மக்களுக்கு தேவையான முக்கிய பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு எட்டப்படாதது கவலைக்கிடமானது. மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விசனம் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான கந்தசாமி பிரபு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மற்றும் அமைச்சரான சுனில் ஹந்துன்நெத்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், துறைசார் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை – மனித மோதல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக இப்பிரதேசம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்துக்கு முன்பு சுற்றாடல் அமைச்சர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தபோது பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார். ஆனால் ஒரு வருடம் கடந்தும் அதே பிரச்சினைகள் குறித்து மீண்டும் பேச வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்த மோதலுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று மகாவலி அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருவதுதான். இதன் விளைவாக காடுகளில் வாழும் யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நிலை அதிகரித்துள்ளது. மகாவலித் திட்டத்தின் மூலம் தண்ணீர் வருகிறதா இல்லையா என்பது கேள்விக் குறியாக இருந்தாலும், யானைகள் வருவது மட்டும் நிச்சயம். சமீபத்தில் வாழைச்சேனையில் ஏற்பட்ட சம்பவம் இதற்கு சான்றாகும்.

மகாவலி திட்டத்தை முன்னிறுத்தி பாரிய அளவில் மண் அகழ்வு நடைபெற்று வருவதால் மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதாரப் பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகின்றன.

தொடர்ச்சியான கனமழை மற்றும் முன்பு ஏற்பட்ட புயல் காரணமாக மாவட்டத்தில் நெற்பயிர்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. வயல் வெட்டும் காலத்தில்கூட விவசாயிகள் நெல் காய வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஈரநெல்லை 5 ஆயிரம் ரூபாவுக்குக் கூட விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் காப்பீட்டு நிவாரணம் பெற முயன்றபோது 2026 பெப்ரவரி 13 ஆம் தேதி காப்பீட்டு காலம் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டதால் நிவாரணம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் அநியாயமான நிலை.

நெல் கொள்வனவில் ஈடுபடும் சில பெரிய வர்த்தகர்கள் ஆடம்பர வாகனங்களும் ஹெலிகொப்டர்களும் வாங்கும் நிலையில் உள்ளனர். ஆனால் இப்பகுதி விவசாயிகள் தங்களது உற்பத்தியைச் சந்தைப்படுத்த முடியாமல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அரசியல் அல்லது நிர்வாக மட்டத்தில் மறைமுகச் செயற்பாடுகளா என்ற சந்தேகம் எழுகிறது.

மாவட்டத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைமையிலான உள்ளூராட்சி சபைகள் முன்வைக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் தரப்பில் தாமதம் நிலவுகிறது. தமிழரசுக் கட்சி சார்ந்த உள்ளூராட்சி அமைப்புகள் அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதைத் தடுக்க முயற்சி நடைபெறுகின்றதா என்ற சந்தேகம் உள்ளது.–என்றார்.











# அட்டாளைச்சேனையில் வீதிகள் புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கடந்த பல வருடங்களாக செப்பனிடப்படாமல் இருந்த அட்டாளைச்சேனை ஆர்.டி.எஸ். வீதி, ஆலையடிவேம்பு நாவற்குடா நிகோட் பின் வீதி ஆகிய இரு வீதிகளுக்கும்கார்பெட்மற்றும்கொங்கிரீட் இடும் பணிகள் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும்,அரசியல்பேரவைஉறுப்பினரும்நாடாளுமன்றஉறுப்பினருமானஅபூபக்கர் ஆதம்பாவாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஒரு கிலோ மீற்றர் கொண்ட அட்டாளைச்சேனை ஆர்.டி.எஸ். வீதியானது 2 கோடி 20 லட்சம் ரூபா செலவிலும் 530 மீற்றர் கொண்ட ஆலையடிவேம்பு நாவற்குடா நிகோட் பின் வீதியானது ஒரு கோடி 8 லட்சம் ரூபா செலவிலும் செப்பனிடப்பட்டு, புனரமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஏ.சீ.எம்.அப்கர் மற்றும் ஆர். திரவியராஜ், அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் உவைஸ், கல்முனை, அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர்களான அஸ்மிர் மற்றும் யூ.ஏ.பாரி, பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸவின் இணைப்பாளர் தோழர் சத்தார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் ஆசிரியர் எஸ்.எம். ஆரிப் உட்பட இரு பிரதேச செயலகங்களின் பிராஜாசக்தி தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்திக்கான நிதிகள் திரும்பிச் செல்லாதிருப்பது திணைக்கள அதிகாரிகளின் கையிலேயே தங்கியுள்ளது

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவிப்பு



(வாஸ் கூஞ்ஞ)

அபிவிருத்திகளுக்கான நிதி கைவசம் வந்துள்ளன. ஆகவே அபிவிருத்தி திட்டங்களை உடனடியாக தீட்டி அவற்றை குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவு செய்வது அந்தந்த திணைக்கள அதிகாரிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என்று பிரதி அமைச்சரும் மன்னார் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஆர்.எச்.உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மன்னார் நகர் பிரதேச செயலாளர் கே.காண்டீபனின் ஒழுங்கமைப்பில் பிரதி அமைச்சரும் மன்னார் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஆர்.எச்.உபாலி சமரசிங்க தலைமையில் மன்னார் நகர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான ஆர்.எச்.உபாலி சமரசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில்,

எங்கள் முதலாவது நோக்கமாக இருப்பது 2026 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலுக்காக நாம் ஒன்று கூடியுள்ளளோம்.

முதலில் நான்கு விடயங்கள் முக்கியமாக இருக்கின்றன. முதலாவதாக கிராம அபிவிருத்தி மற்றும் பாதைகள் அபிவிருத்தி. இதில் சென்ற வருடங்களுக்கான குறைபாடுகளும் இருக்கின்றன.

அடுத்து பிரஜா சக்தி என்ற திட்டம் அதிகமாக எல்லா பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில கிராமங்களில் நாங்கள் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இவற்றையும் மிக விரைவாக ஆரம்பிக்க இருக்கின்றோம்.

இவ்வாறு கிறீன் ஸ்ரீலங்கா சில திட்டங்களையும் இங்கு நடைமுறைப்படுத்த இருக்கின்றோம். அவற்றில் மன்னார் பிரதேச செயலகத்திலுள்ள திட்டங்களைப் பற்றியும் இங்கு கலந்துரையாட இருக்கின்றோம்.

இத்துடன் போதை மற்றும் நச்சுப் பொருள்கள், பாதாள குழு செயற்றபாடுகள் தொடர்பான திட்டவட்டமான தீர்மானங்களையும் நாம் எடுக்க வேண்டியுள்ளது.

அத்துடன் டித்வா புயலின் காரணமாக ஒரு பகுதினர் இன்னும் நிவாரணம் பெறாத நிலை இருக்கின்றது. எனவே அவர்களுக்கு உரிய நிவாரணங்களையும் மிக விரைவில் வழங்க இருக்கின்றோம்.

மேலும் எங்களுக்கு சாதகமான நிலையும் காணப்படுகின்றது. அதாவது இப்பொழுது எமது அபிவிருத்தி திட்டத்துக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு திணைக்களத்திலும் நாளைய தினமே திட்டங்கள் தீட்டப்பட்டு உடனே அந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டால் உடனே அதற்கான நிதியை விடுவிப்பதற்கான வசதியும் இருக்கின்றது என்பதையும் தெரிவித்து நிற்கின்றேன்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் காலப் பகுதிக்கு முன்பு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்ய போதிய காலங்கள் இருக்கின்றன. கடந்த வருடங்கள் இறுதி நேரத்தில் திட்டங்களை நிறைவு செய்ய முடியாது நிதியைத் திருப்பி அனுப்பிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இந்த நிலை இனி நடக்கக் கூடாது.

விவசாயம் மற்றும் காணி அமைச்சர், இருநூறு மில்லியன் ரூபாவை இந்த பகுதிக்காக ஒதுக்கியுள்ளார். விஷேடமாக இங்குள்ள குளங்களை புனரமைப்பதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

நிதியை ஒதுக்கீடு செய்வது மட்டுமே எங்களால் செய்ய முடியும். ஆனால் அதற்கான செயற்றிட்டங்களைத் தீட்டி ஒப்பந்தங்கள் வழங்கி அவற்றை செயல்படுத்துவது அந்தந்தத் திணைக்களங்களின் அதிகாரிகளின் கையிலேயே உள்ளது.– என்றார்.





# உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா மேம்பட்டுக்கு 130 மில்லியன் ரூபா நிதி!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான இடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளூர் வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படவுள்ளது. அதனூடாக அந்நிய செலாவணி ஈட்டப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்துக்குச் சென்று அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றை பார்வையிட்ட பின்னர் அங்கு கிராம மட்ட அமைப்புக்களோடு உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மணல்காடு ஓலாந்தர் கால டச்சு தேவாலயத்துக்கு 4.2 மில்லியன் நிதி ஒதுக்கப்படவுள்ளது எனவும் மானிப்பாய் பிரதேசத்திலும் பல அழகான இடங்கள் புனரமைக்கப்பட வுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை வட்டரா உறுப்பினர் அகஸ்டின், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கமல், பிரஜா சக்தி தலைவர் மற்றும் நிர்வாகிகள், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் செயலணியின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் அக்கரைப்பற்றில்

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று மாநகர பிரதேசத்தில் வீதிகளில் வாகன போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் செயலணியின் செயற்றிட்ட முன்னேற்றங்களை ஆய்வு செய்யும் விசேட கூட்டம், முதல்வரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.எல்.எம். அதாஉல்லா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது செயலணி உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றை விரைந்து நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களாக பாடசாலைகள் அமைந்துள்ள எல்லைப் பகுதிகளில், பள்ளி ஆரம்பிக்கும் மற்றும் கலையும் நேரங்களில் வாகனங்கள், ஓட்டோகள், மோட்டார் சைக்கிள்கள் உட்செல்லாமல் தடுக்கும் வகையில் சாலை தடுப்புகள் அமைத்தல், மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் பராமரிப்பில் உள்ள வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு விதித்தல். மேலும், உள்ளக வீதிகளில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச வேகத்தை குறிப்பிடும் விளம்பரப் பலகைகள் நிறுவுதல்.

நாற்சந்திகள், பெரிய வளைவுகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சாலை பாதுகாப்பு கண்ணாடிகள் பொருத்துதல், விபத்துகள் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் பொருத்தமான இடங்களில் நிறுவுதல், போக்குவரத்து ஒழுங்கு தொடர்பாக ஜும்ஆ பிரசங்கங்கள், ஒலிபெருக்கி மூலம் வீதி பிரச்சாரங்கள், பாடசாலை மற்றும் மத்ரசா மாணவர்களுக்கு காலைக்கூட்டம் மற்றும் வகுப்பறைகளில் விழிப்புணர்வு அறிவுரை வழங்குதல். மேலும் பத்திரிகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் போன்றன எட்டப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் மூலம் அக்கரைப்பற்று மாநகரப் பகுதியில் போக்குவரத்து ஒழுங்கு மற்றும் வீதி பாதுகாப்பு நிலையை மேம்படுத்த முடியும் என்று முதல்வர் தெரிவித்தார். செயலணி உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இணைந்து விரைவான செயல்பாட்டை உறுதி செய்வர் என்றும் குறிப்பிடப்பட்டது.





# உணவகங்கள் வீதியோரக் கடைகளில் நோன்பு காலத்தில் விசேட சோதனை!

(அபு அலா)

நோன்பு காலத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை சுகாதார பிராந்தியத்துக்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் வீதியோரக் கடைகள் யாவும் தொடர்ச்சியாகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது மக்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல்.அலாவுடீன் தலைமையின் கீழ் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொண்ட குழுவினர் வீதியோரக் கடைகள் மற்றும் உணவகங்களில் விசேட சுகாதார பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது உணவுப் பொருள்களின் தரம், சேமிப்பு முறை, சுற்றுப்புறத் தூய்மை, பணியாளர்களின் தனிநபர் சுகாதாரம், சமயலறைகள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்றவற்றை மிகத் துள்ளியமாக ஆய்வு செய்யப்பட்டது.

இதேவேளை மனித பாவனைக்கு உதவாத தரமற்ற பொருள்கள் அகற்றப்பட்டன. சிலருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மீண்டும் அதே தவறைச் செய்பவர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல். அலாவுடீன் தெரிவித்தார்.





# இலங்கையில் பசுமைப் புரட்சி ஏற்படுத்தும் மின்மினிக்கு அக்கரைப்பற்றில் கௌரவிப்பு

(ஜலீல் ஜீ)

இலங்கையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி வரும் மின்மினி மின்ஹாவினது அயராத சமூக சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் உள்ள மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது அமைப்பின் திட்டமிடல் உத்தியோகத்தரும், அம்பாறை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவியும், நுஜா ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தவிசாளருமானஜனாபா.யூ.எஸ்.எம்.ஹபீஷா, தமிழ் லெட்டர் ஊடக அமைப்பின் உத்தியோகத்தரும், ஆசிரியையுமான ஜனாபா ஏ. அன்சார் பிவி (கலையரசி), ஆசிரியை. யூ.எஸ்.எம்.ஐநுல் மர்ழியா, தமிழ் லெட்டர் ஊடக அமைப்பின் இந்திய ஊடகவியலாளர் ஏ.அமீதா மற்றும் தமிழ் லெட்டர் ஊடக அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ. ரமீஸ் ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்தி, பதக்கம் அணிவித்து, பணப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.













# ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதியம் தொடர்பாகக் ஹட்டனில் தெளிவூட்டல்

(மஸ்கெலியா நிருபர்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் சம்பந்தமான விரிவாக தெளிவூட்டல் இடம்பெற்று வருகிறது.

ஹட்டன் சீடா வள நிலையத்தில் இலங்கை சமாதான பேரவையின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் திருமதி இரேஷா உதேனி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் சுமார் 180 இற்கும் மேற்பட்ட நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த பல ஆண்டுகளாக ஊழியர் நம்பிக்கை நிதியம் பெற்று கொள்ள முடியாமல் உள்ளவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அவர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் நுவரெலியா மாவட்ட நுவரெலியா ஊழியர் சேமலாப நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் அதன் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு அதற்கான தீர்வைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறான சேவையால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரிதும் நன்மை அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# மருதனார்மடம் சந்தையில் இலவச நீரிழிவு பரிசோதனை

யாழ். நீரிழிவுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மருதனார்மடம் சந்தையில் இலவச நீரிழிவுப் பரிசோதனை நடைபெற்றது.

இந்த நிகழ்வை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதி எஸ். ரவிராஜ் ஆரம்பித்து வைத்தார். இவருடன் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி, சங்கானை வைத்தியசாலை வைத்தியர் மற்றும் உடுவில் பிரதேச சபை தவிசாளர் தீபன் மற்றும் நீரிழிவு கழகத்தினரும் இணைந்திருந்தனர்.

இந்த முகாமில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, உடல் திணிவுச் சுட்டி காணல் மற்றும் வைத்திய ஆலோசனைகள் என்பன இடம்பெற்றன.

175 இற்கும் மேற்பட்ட விவசாயிகள், பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர்.

தமக்கு நீரிழிவு இருப்பது தெரியாது நீரிழிவுடன் வாழ்ந்து வந்த சிலர் இதன்போது இனம் காணப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.





# முன்பள்ளி ஆசிரியருக்கான தலைமைத்துவ பயிற்சிகள் மகாஓயா பிரதேச செயலகத்தில்

(ஜலீல் ஜீ)

முன்பள்ளி ஆசிரியைகளின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தி, அவர்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் மகாஓயா பிரதேச செயலகத்தில் சிறப்பு தலைமைத்துவப் பயிற்சி நடைபெற்றது.

மகாஓயா பிரதேச செயலாளர் திருமதி ஷ்யாமலி குலதுங்கவின் வழிகாட்டுதலின் கீழ், உதவி பிரதேச செயலாளரின் பங்கேற்புடன் ஆரம்பக் குழந்தை பருவ அபிவிருத்தி அதிகாரி நிலங்கா ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பயிற்சி நிகழ்வில் மகாஓயா மற்றும் பதியத்தலாவை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியைகள் கலந்து கொண்டு தலைமைத்துவம், ஒத்துழைப்பு மற்றும் குழு பணியின் முக்கியத்துவம் தொடர்பில் பயிற்சி பெற்றனர்.

நிகழ்வில் வளவாளர்களாக மாவட்ட ஆரம்பக் குழந்தை பருவ அபிவிருத்தி அதிகாரி சுரஞ்சி விஜேரத்ன மற்றும் உஹன ஆரம்பக் குழந்தை பருவ அபிவிருத்தி அதிகாரி இரேஷா சஞ்சீவனி ஆகியோர் பங்கேற்று பயிற்சிகளை வழங்கினர்.

கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத் தலைவர் அமீர்தீன் மற்றும் அம்பாறை மாவட்ட செயற்பாட்டு பணிப்பாளர் நிஷாந்த ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசிரியைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினர்.

இரு பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியைகளுக்கிடையில் நல்லிணக்கமும் நேர்மையான மனப்பாங்கும் உருவாகச் செய்வதே இந்நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாக இருந்தது.

அத்துடன் மகாஓயா கலாசார அதிகாரி சமன் பண்டார மற்றும் அரச மேலாண்மை உதவி அதிகாரி வசந்தா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.







# அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தில் புதிய இன நெல் மாதிரி அறுவடை விழா!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

விவசாய திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் மறுமலர்ச்சியின் விடியல் உயர் விளைச்சல் நெற்செய்கை "யாய" செயற்றிட்டம் மற்றும் புதிய நெல் இனங்கள் மாதிரி நெற்செய்கை அறுவடை நிகழ்வு அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது.

நாவிதன்வெளி அன்னமலை விவசாய விரிவாக்கல் நிலையம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு விவசாய போதனாசிரியரும் நிலையத்தின் பொறுப்பதிகாரியுமான எஸ். சசிகரன் தலைமையில் நடைபெற்றது.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப உயர் விளைச்சலைத் தரக்கூடிய புதிய நெல் இனங்கள் மாதிரியாக இங்கு செய்கை பண்ணப்பட்டு அதன் அறுவடை நடைபெற்றது.

புதிய நெல் இனமானது நவீன தொழில்நுட்பத்தில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கூடிய விளைச்சலை தரக்கூடியதாகும். விவசாயிகள் மத்தியில் இந்த நெல் இனத்தை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் அதே போன்று இதன் பீடை தாக்கங்கள் நெல் விளைச்சலில் போது விவசாயிகள் எதிர் நோக்கும் பல்வேறு சவால்கள் குறித்தும், இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. விவசாயிகளுக்கு விளக்கமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விவசாய திணைக்களத்தின் பயிற்சி மற்றும் விரிவாக்கல் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் சிசிர குமார, மேலதிக பணிப்பாளரும் விவசாய நிபுணருமான அநுர விஜயதுங்க, அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் தரங்க தனசேகர, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா உட்பட உதவி விவசாய பணிப்பாளர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பிரதேசத்தின் விவசாயிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.










# பொருளாதார ரீதியாக நலிவுற்ற குடும்பங்களுக்கு உலருணவு

(பூ.லின்ரன்)

மாதகல் பகுதியில் வசிக்கும் பொருளாதார ரீதியாக நலிவுற்ற, தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அகில இலங்கை மீனவ மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியத்தின் 75 பிறந்த நாளை முன்னிட்டு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

உலருணவு பொதிகள் மாதகல் – பரிமளகந்தி படிப்பகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

# நுவரெலியா – ஹட்டன் சொகுசு பஸ் சேவையில் ஒழுங்குமுறை அவசியம்!

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிப்பு



(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா ஹட்டன் மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் சில சொகுசு பஸ்களில் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

பஸ் நடத்துனர் பயணிகளுடன் மரியாதையற்ற முறையில் நடந்து கொள்கிறார் என்றும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஒரு ஆசனத்தில் 4 பேர் அமர வேண்டிய நிலையில் 5 பேரை அமர்த்த முயற்சி செய்யப்பட்டதும், சில இடங்களுக்கு செல்லும் பயணிகளிடம் கட்டாயமாக முழு கட்டணம் வசூலிக்க முயன்றதும் கவலைக்குரியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசன எண்ணிக்கையை மீறிப் பயணிகளை ஏற்றியதாகவும், சிலருக்கு மட்டுமே பயணச்சீட்டு வழங்கப்பட்டதாகவும், கூறப்படுகிறது.

பொது போக்குவரத்து சேவை என்பது மக்கள் நம்பிக்கையுடன் பயன்படுத்தும் ஒரு அத்தியாவசிய சேவையாகும். எனவே சாரதியும் நடத்துனரும் பயணிகளுடன் மரியாதையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அரசு நிர்ணயித்துள்ள ஆசன எண்ணிக்கையை மீறி பயணிகளை ஏற்றக் கூடாது. ஒவ்வொரு பயணிக்கும் கட்டாயமாக பயணச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தைத் தவிர அதிக கட்டணம் வசூலிக்கக் கூடாது. பயணிகளை அச்சுறுத்தும் அல்லது அதிகாரத் தோரணையில் பேசும் நடைமுறை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் மத்திய மாகாண போக்குவரத்து சபையும் போக்குவரத்து பொலிஸாரும் உடனடி விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் மரியாதையான சேவையே நல்ல பொது போக்குவரத்தின் அடையாளம் என்பதை சம்பந்தப்பட்டோர் நினைவில் கொள்ள வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் சேவையில் ஈடு படுத்தப்பட்டுள்ள தனியார் பஸ்களில் பயணச் சீட்டு வழங்கப்படுவதில்லை எனவும் உடன் அமுலுக்கு வரும் வகையில் மத்திய மாகாண போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் பயண சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.



- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

# ஈரானின் தலைவிதி மாறுமா? கொமேனியின் ஆட்சி வீழுமா?

**(கடந்த வருடம் 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தி தளங்கள் மற்றும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் பெருமளவில் சிதைக்கப்பட்டன.)**

ஈரானின் இதயப் பகுதியை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரானில்தான் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். ஈரான் அரசின் முக்கிய அலுவலகங்கள் இங்குதான் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில்தான் இஸ்ரேல், ஈரானின் இதயப் பகுதியான டெஹ்ரானை குறிவைத்து தாக்கி உள்ளது. மேலும் ஈரானின் பல்வேறு முக்கிய இடங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதலை தொடங்கி உள்ளது. இஸ்ரேலின் ஏவுகணைகள் ஈரான் தலைநகரில் பல இடங்களில் தாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனாலும் ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி இஸ்ரேல் தாக்குதலுக்கு நடுவே எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை.

### மீண்டும் ஈரான் - இஸ்ரேல் போர்

எதிர்பார்க்கப்பட்ட ஈரான் – இஸ்ரேல் இடையே போர் வெடித்துள்ளது. இதனால் பொதுமக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாதுகாப்பான இடங்களில் பதுங்க வேண்டும் என்று ஈரான் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

அதன்படி டெஹ்ரானின் ஜோம்ஹறி சதுக்கம், ஹாசன் அபாத் சதுக்கம் உள்பட பல இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று முதற்கட்டமாக தகவல் வெளியாகி உள்ளது. குறிப்பாக டெஹ்ரானில் உள்ள ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அலுவலகத்தை குறிவைத்து ஏழு ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளது. இந்த ஏவுகணைகள் அலுவலகத்தைத் தாக்கியதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. அயதுல்லா அலி கமேனி தற்போது சுரங்கத்துக்குள் இரகசியமாகப் பதுங்கியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் ஈரான் உளவுத்துறை அலுவலகம், பாதுகாப்பு துறை அமைச்சகம், அணுசக்தி திட்டங்களின் கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேலும் ஈரானின் சகாபர் கடற்கரை மற்றும் பாரசீக வளைகுடா கடற்பகுதிகளிலும் தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த தாக்குதலில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கியுள்ளது. இதனால் ஈரான் மோசமான விளைவுகளை சந்திக்க உள்ளது.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரானும் தாக்குதலை தொடங்கி உள்ளது. முதற்கட்டமாக முப்பது ஏவுகணைகள் இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவை நோக்கி ஈரான் அனுப்பி உள்ளது. இதனால் மீண்டும் இஸ்ரேல் – ஈரான் இடையே போர் தீவிரம் அதிகரித்துள்ளது.

### அமெரிக்காவும் இணைந்து தாக்குதல்

தற்போது ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதலை தொடங்கியுள்ளதாக டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானில் விலைவாசி உயர்வுக்கு தீர்வு கோரியும் கொமேனி ஆட்சியை எதிர்த்தும், அந்த நாட்டு இந்த ஆண்டு ஆரம்பத்தில் மக்கள் போராட்டம் நடத்தினர். ஈரான் அரசு, போராட்டக்காரர்கள் மீது, ராணுவத்தினரை கொண்டு தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர். பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை கைவிட வேண்டும். இல்லை எனில், ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்து வந்தார்.

மேலும், அணு ஆயுதம் தயாரிக்க மாட்டோம் என்று ஈரான் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று டிரம்ப் கூறினார். இது தொடர்பாக, ஈரான் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் இடையே ஓமன் நாட்டின் முயற்சியால் பேச்சு வார்த்தை நடந்து வந்தது. இதில் எந்த முன்னேற்றமும் இல்லை என்று அதிபர் டிரம்ப் கூறியிருந்தார்.

இன்னொரு பக்கம் மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது படை பலத்தை அதிகரித்து வைத்திருந்தது. இந்த நிலையில் தற்போது இஸ்ரேல் மற்றும் அமெரிக்க இராணுவத்தினர், ஈரான் மீது தீவிர தாக்குதலைத் தொடங்கினர். தலைநகர் டெஹ்ரான் மற்றும் ஜோம்ஹாரி பகுதிகளில் அடுத்தடுத்து பல ஏவுகணைகள், குண்டுகள் வந்து விழுந்தன.

### ஈரான் உச்ச தலைவர் குறி?

ஈரான் உச்ச தலைவர் இல்லத்தை குறிவைத்தும்

தொடர்ச்சி▼

# ஈரானின் தலைவிதி மாறுமா? கொமேனியின் ஆட்சி வீழுமா?

தொடர்ச்சி▲

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து ஈரான் மீதான வான்வழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ள இஸ்ரேல், ஈரான் அதிபரின் அதிகாரபூர்வ இல்லம் மற்றும் முக்கிய உளவுத்துறை அலுவலகங்கள் உட்பட பல இடங்களைத் துல்லியமாகத் தாக்கி அழித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானுக்கு அணு ஆயுதங்கள் செல்வதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதலை ஆரம்பித்துள்ளோம். ஈரானின் கடற்படை முற்றிலும் அழிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பல மாதங்களுக்கு முன்பே திட்டமிடத் தொடங்கியதாகவும் சில வாரங்களுக்கு முன்னர் தாக்குதலின் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஈரான் அதன் அணுச்சக்தித் திட்டத்தைத் தொடர்ந்தால் தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேலும் அமெரிக்காவும் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் அண்மையில்தான் ஈரானும் அமெரிக்காவும் அணுச்சக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையை நடத்தின. இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் (Israel Katz) நாடு முழுவதும் நெருக்கடி நிலையை அறிவித்துள்ளார். இஸ்ரேல் நேரப்படி பெப்ரவரி 28 காலை 8.15 மணிக்கு நாடு முழுவதும் எச்சரிக்கை மணி ஒலித்தது. அங்குள்ள மக்கள் விழிப்புடன் இருக்க அவ்வாறு செய்யப்பட்டது.

எந்த நேரமும் இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னெச்சரிக்கையாக அனைத்துப் பாடசாலைகளையும் அலுவலகங்களையும் மூடியதாக இஸ்ரேலிய அரசு அறிவித்தது. அத்தியாவசியச் சேவைகள் மட்டும் செயல்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### 2025 ஜூன் 12 நாள் போர்

கடந்த 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தி தளங்கள் மற்றும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் பெருமளவில் சிதைக்கப்பட்டன. இது ஈரானின் பிராந்திய செல்வாக்கை பாரிய அளவில் முடக்கியது. குறிப்பாக, ஈரானின் நீண்டகாலத் தூண்களாக இருந்த ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் மிகவுமே பலவீனமடைந்துள்ள நிலையில், சிரியாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், ஈரானின் எதிர்ப்பின் வீரியம் மிகவுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதே யதார்த்த நிலையாகும்.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது ஈரான் இன்று மிகவும் பலவீனமான ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. 2026 ஜனவரி தொடக்கத்தில், ஈரானின் முக்கிய பொருளாதாரக் கூட்டணியான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவால் சிறைபிடிக்கப்பட்டதும், ஈரானின் நிழல் கப்பற்படையின் எண்ணெய் விநியோக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதும் நாட்டின் வருமானத்தைக் கிட்டத்தட்ட அடியோடு நிறுத்தியுள்ளது எனலாம்.

அதேவேளை, கடந்த ஆண்டு இறுதியில் ஈரானிய ரியால் நாணயம் படுபயங்கரமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வங்கிப் பணப் பரிமாற்றங்களும் முடங்கியுள்ளதால், நடுத்தர வர்க்கம் முதல் பெரிய வணிகர்கள்வரை அனைவரும் இன்று வீதிக்கு வந்துள்ளனர். வரலாற்றில் ஓர் ஆட்சி கவிழ்வதற்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் ஒரே புள்ளியில் இணைந்துள்ள ஒரு நிலையாகவே இந்நிலை காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### ஈரானின் கடற்படை அழிக்கப்படும்

ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கி உள்ளதை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார். அமெரிக்கர்களை பாதுகாப்பதே எங்களின் நோக்கம். ஈரான் எப்போதும் அணு ஆயுதங்களை வைத்திருக்க கூடாது. ஈரானில் ஆட்சியில் உள்ள அச்சுறுத்தல்களை அகற்றுவதே எங்கள் முக்கிய நோக்கம். ஈரானில் மிகப்பெரிய அளவில் தாக்குதலை அமெரிக்கா முன்னெடுத்திருக்கிறது. அணு ஆயுத மறுகட்டுமானத்துக்கு ஈரான் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

ஈரான் நாட்டின் ஏவுகணைகள் அனைத்தும் நிர்மூலமாக்குவோம். பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதில் உலகத்திலேயே ஈரான் முதலிடத்தில் உள்ளது என்று குற்றம் சாட்டி உள்ளார். இதற்கிடையே, இஸ்ரேல், அமெரிக்கா மீது விரைவில் பதில் தாக்குதல் நடைபெறும் என ஈரான் தெரிவித்துள்ளது.

### கொமேனியின் ஆட்சி வீழுமா?

ஈரானில் 1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய – பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த சில காலமாகவே தொடர்ச்சியாக மோதல் போக்கு நிலவியது. பேச்சுவார்த்தை ஒரு பக்கம் நடந்தாலும் அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை அங்குத் தொடர்ந்து அனுப்பி வந்தது.

ஹார்முஸ் நீரிணை முதல் காஸ்பியன் கடல்வரை பரந்து விரிந்திருக்கும் ஈரானின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பானது, உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் தங்களுக்குச் சாதகமான ஒரு அரசை அங்கு உருவாக்க வரலாற்று ரீதியில் முனைந்துள்ளன.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு இன்று அதன் 47 ஆண்டுகால குடியரசு வரலாற்றிலேயே மிக முக்கியமான நிலையில் இருக்கிறது. ஈரான் அரசு ஆட்சி கவிழும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது. ஈரானில் இராணுவ ஆட்சி, அமெரிக்க பொம்மையாட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று முடிவுகளில் எதுவும் சாத்தியமாகலாம் என்ற நிலையில் தான் உள்ளது.

### கன்னியாகுமரி பெருமாள்புரத்தில்

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து வசதிகளுடனும் 90 வீடுகள்

### முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7.85 கோடி ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் முகாம்வாழ் தமிழர்கள் திறந்து வைத்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பெருமாள்புரத்திலும், பழவிளையிலும் செயல்பட்டு வருகின்றது. அதேபோன்று விளவங்கோடு வட்டத்தில் கோழிவிளை மற்றும் ஞாரான்விளையிலும் செயல்பட்டு வருகிறது. மேற்காணும் முகாம்களில் சுமார் 1200 இலங்கை தமிழ் மக்கள் வசித்து வருகின்றனர்.

அவர்களின் வாழ்க்கை தரம் மேம்பட தமிழ்நாடு அரசு மாதந்தோறும் உதவிகளை வழங்குகிறது. அத்துடன், முகாம் வாழ் மக்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப தையல் பயிற்சி, ஓவியப் பயிற்சி போன்ற திறன்மிகு சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டும் வகையில் கட்டணமில்லாமல் பயிற்சிகளை வழங்குகிறது.

இதேவேளை, பழவிளையில் 4 கோடியே 66 இலட்சம் ரூபா செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட 72 வீடுகள் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பால்வளத் துறை அமைச்சர் த. மனோதங்கராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றத்திலிருந்து

# 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள் செய்து 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரை!

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றத்தில் இருந்து 2026 பெப்ரவரிவரை 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள் மேற்கொண்டு 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார்.

இது இந்தியாவின் நிர்வாகத் தலைவருக்கான சாதனை என பாஜக பாராட்டியுள்ளது. இந்தச் சாதனையை "இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்று கூறியுள்ளது. இந்திய பிரதமர்களில் அதிகயளவில் வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியவர்களில், குறிப்பாக அனைத்து காங்கிரஸ் பிரதமர்களையும் விட மோடி அதிகமாக உரையாற்றி சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து பாஜக 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது, "பிரதமர் நரேந்திர மோடி வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் பேசும்போது, உலகமே அவரது பேச்சை கேட்கிறது. அவர் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியதிலிருந்து இஸ்ரேலின் நெசெட் வரை," என்று இதுவரை 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றி சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனையை அது "இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்றும் அந்தந்த நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் நட்புறவையும் வலுப்படுத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஏழு வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார், இந்திரா காந்தி நான்கு மற்றும் ஜவஹர்லால் நேரு மூன்று நாடாளுமன்றங்களிலும் உரையாற்றியுள்ளார். முன்னாள் பிரதமர்கள் ராஜீவ் காந்தி மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோர் தலா இரண்டு வெளிநாட்டு நாடாளுமன்றங்களிலும் உரையாற்றியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு, பதவியேற்ற சிறிது நாள்களிலேயே ஆஸ்திரேலியா, பிஜி, நேபாளம் மற்றும் பூடான் நாடாளுமன்றங்களில் மோடி உரையாற்றினார். 2015 மார்ச் மாதம் மொரிஷியஸ் தேசிய சட்டப்பேரவையிலும், இலங்கை நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அதே ஆண்டில், மங்கோலியா நாடாளுமன்றத்தில் பெரிதும் பாராட்டப்பட்ட உரையை ஆற்றினார். பின்னர் நவம்பரில் இங்கிலாந்து நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார்.

டிசம்பர் 2015 இல் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஜூன் 2016 இல் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய போது அவரது உரை, அனைத்து உரைகளுக்கும் மேலானதாக இருந்தது. 2018 இல் அவர் உகாண்டா நாடாளுமன்றத்திலும், 2019 இல், மாலத்தீவு நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். 2023 இல் மீண்டும் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

அமெரிக்க காங்கிரஸில் ஆற்றிய இரண்டாவது உரையில், "ஜனநாயகம் என்பது விவாதத்தையும் உரையாடலையும் வரவேற்கும் கருத்து. ஜனநாயகம் என்பது சிந்தனைக்கும் வெளிப்பாட்டிற்கும் சிறகுகளைத் தரும் கலாசாரம். பழங்காலத்திலிருந்தே இத்தகைய மதிப்புகளைக் கொண்டிருப்பது இந்தியாவுக்கான ஆசீர்வாதம். ஜனநாயக உணர்வின் பரிணாம வளர்ச்சியில், இந்தியா ஜனநாயகத்தின் தாய்." என்று குறிப்பிட்டார்.

2024ஆம்ஆண்டுகயானாநாடாளுமன்றத்திலும் ஜூலை 2025 இல் கானா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார், அதைத் தொடர்ந்து அதே மாதத்தில் டிரினிடாட் மற்றும் டொபாகோ நாடாளுமன்றத்திலும் நமீபியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அந்த ஆண்டின் பிற்பகுதியில், அவர் எத்தியோப்பியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார்.

சமீபத்தில், அவர் இஸ்ரேலில் நெசெட்டில் உரையாற்றினார், மேலும் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் மிக உயர்ந்த விருதையும் பெற்றார். நெசெட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி, ஒக்ரோபர் 7, 2023 இல் ஹமாஸ் தாக்குதலை எழுப்பி இஸ்ரேலிய குடிமக்களின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்தார். பெப்ரவரி 2026 நிலவரப்படி, மோடி 79 நாடுகளுக்கு 99 முறை சர்வதேச பயணங்களை மேற்கொண்டு 19 நாடாளுமன்றங்களில் உரையாற்றி சாதனை படைத்துள்ளார்.- என்றுள்ளது.



# கெமேனியைக் கொன்ற அமெரிக்காவுக்கு மரண அடி கொடுப்போம் என்கிறது ஈரான்

கெமேனியை கொன்ற அமெரிக்காவுக்கு மரண அடி கொடுப்போம் என்று ஈரானின் உச்ச தலைவர் அலி என்று ஈரான் சபாநாயகர் முகமது பாகெர் கலிபாப் (Mohammad Bagher Qalibaf) எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தலைவர்களை “மோசமான குற்றவாளிகள்” என்று அழைத்த ஈரான் சபாநாயகர், இஸ்லாமியக் குடியரசு மீதான தொடர்ச்சியான தாக்குதல்களுக்காக “பேரழிவு தரும் அடிகளை” எதிர்கொள்ள நேரிடும் எனவும் சுட்டிக்காட்டினார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

“அமெரிக்காவும் இஸ்ரேலும் சிவப்புக்கோட்டைத் தாண்டிவிட்டன, அதற்கான விலையை அவர்கள் கொடுத்தே ஆக வேண்டும்.

இந்தப் போர் ஈரானின் வாழ்வா சாவா என்ற போர் மட்டுமல்ல, இறுதிப் பழிவாங்கலுக்கான போர்.

நெதன்யாகு மற்றும் ட்ரம்ப்பிற்கு நான் சொல்வது இதுதான் நீங்கள் கெஞ்சும் அளவிற்கு வலிமைமிக்க அடிகளை உங்கள் மீது தொடுப்போம். அதை நீங்கள் விரைவில் காண்பீர்கள்” என கூறியுள்ளார்.

# ஈரானால் ஏவப்பட்ட ஏவுகணைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன!

## இஸ்ரேலிய இராணுவம் தெரிவிப்பு

ஈரானில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகளை அடையாளம் கண்டுள்ளதாகவும், தற்காப்பு அமைப்புகள் செயல்பாட்டில் இருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரான் இன்று காலை முதல் மத்திய கிழக்கு முழுவதும் புதிய தாக்குதல் அலைகளைத் தொடங்கியுள்ளது. பல தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்களில் வெடிப்புச் சத்தங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை, இஸ்ரேல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் “ஆறாவது அலை”யைத் தொடங்கியதாகக் கூறியது என்று ஈரானின் அரை அதிகாரப்பூர்வ தஸ்னிம் செய்தி நிறுவனம் முன்னர் தெரிவித்திருந்தது.



இந்த நிலையில், ஈரானில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகளை அடையாளம் கண்டுள்ளதாகவும், தற்காப்பு அமைப்புகள் செயல்பாட்டில் இருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. மத்திய மற்றும் தெற்கு இஸ்ரேல் முழுவதும் சைரன்களின் ஒலி கேட்டவண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




# பாகிஸ்தானில் வெடித்த போராட்டம் சேதமாக்கப்பட்ட அமெரிக்கத் தூதரகம்!

## துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரகம் அருகே இன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் வன்முறையைத் தவிர்க்கவும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் ரேஞ்சர்ஸ் படையினர் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எம்.டி. கான் வீதியில் உள்ள தூதரகத்துக்கு வெளியே திரண்ட நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள், தூதரக வளாகத்துக்குள் நுழைய முற்பட்டதுடன் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் துணை இராணுவப் படையினரும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதுடன், தடியடி நடத்தியும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க முயன்றுள்ளனர்.

அமெரிக்க படைகள் நடத்திய அதிரடி தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டமையை கண்டித்து அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான பாகிஸ்தானிலும் ட்ரம்புக்கு எதிராக இன்று போராட்டம் வெடித்துள்ளது.

இதன்போது போராட்டக்காரர்கள் கராச்சியில் உள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், அமெரிக்க தூதரகத்தை சேதப்படுத்தியதாக கூறப்படுகின்றது.

தூதரக வளாகத்துக்குள் புகுந்தவர்கள் அங்கிருந்த பொருள்களுக்கும் தீ வைத்துள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதன்போது நிலைமைக் கட்டுப்படுத்த அங்கு இருந்த பாதுகாப்புப் படையினர் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது ஈரான் பதிலடி தாக்குதலை நடத்தி வருகிறது.

இதனால் அமெரிக்காவின் நேச நாடுகளில் பதற்றம் நீடித்துள்ளது. சவுதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கத்தார், அமீரகம் ஆகிய நாடுகள் மீது ஈரான் தாக்குதல் தொடங்கியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் நடந்த தாக்குதலில் நால்வர் காயம்!

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் அவசரகால மீட்புக் குழுக்கள் உடனடியாகச் செயற்பாட்டுக்கு வந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து கையாளப்பட்டு வருவதாகவும், காயமடைந்தவர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டுபாய் இராணுவத்தால் இடைமறிக்கப்பட்ட ட்ரோன் ஒன்றின் சிதைவுகள் விழுந்ததில், அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் அடிக்கடி வந்து செல்லும் இடமான ஜெபல் அலி துறைமுகத்தின் ஒரு தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது என்று அரசு கூறியுள்ளது.

டுபாய் சிவில் பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாகத் தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்ததாக இதில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

அபுதாபியின் சையத் சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில், இடைமறிக்கப்பட்ட ட்ரோனின் சிதைவுகள் தாக்கியதில் ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஏழு பேர் காயமடைந்தனர் என்று அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


பக்கங்கள் - 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 01/03/2026

## கனேடியர்களை வெளியேறுமாறு வேண்டுகோள்!

வணிக ரீதியான பயண வாய்ப்புகள் இருக்கின்ற போது அவற்றைப் பயன்படுத்தி, பதற்றமுள்ள மத்திய கிழக்கின் C2▶






# அமெ. தாக்குதலுக்கு கனடா முழு ஆதரவு!

## புதிய ஜனநாயகக் கட்சி எதிர்ப்பு

அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டுச் சேர்ந்து ஈரான் மீது தொடுத்திருக்கும் தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க நடவடிக்கைக்கு கனடா ஆதரவு தெரிவித்துள்ளது. எனினும் கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சி (NDP) இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளது.

சனிக்கிழமை அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது பெரும் அளவிலான தாக்குதலை மேற்கொண்டன. இதனைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், 1979 முதல் நாட்டை ஆட்சி செய்து வரும் இஸ்லாமிய தலைமையிடமிருந்து தங்களது விதியை கைப்பற்றுமாறு ஈரான் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலடியாக, ஈரான் இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை இலக்காகக் கொண்டு ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களைப் பாய்ச்சியது. C2▶








# ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகளால் அதிருப்தியுற்று கனடாவுக்குப் படையெடுக்கும் அமெரிக்கத் தாதியர்!

ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகள், மற்ற நாட்டவர்களுக்கு மட்டுமல்ல, அமெரிக்கர்களுக்கும் எரிச்சலையூட்டி வருகின்றமை வெளிப்படையாகியுள்ளது.

ஆம், நூற்றுக்கணக்கான அமெரிக்க செவிலியர்கள், கனடாவை நோக்கித் திரும்பி வருகிறார்கள்.

அமெரிக்காவில், பொதுமருத்துவம், காப்பீடு, மற்றும் மருத்துவ ஆய்வுகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவிகளை கணிசமாக குறைத்துவிட்டார் ட்ரம்ப்.

இந்நிலையில், ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பயங்கர சம்பவம் நடந்தது.

மினியாபோலிஸ் என்னுமிடத்தில், ட்ரம்பின் புலம்பெயர்தல் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்தது.

அப்போது, ட்ரம்பின் அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பெண்ணை நெட்டித் தள்ள, கீழே விழுந்த அவரை C2▶

# கனடாவில் ரைட் - ஷேர் பயணத்தில் யுவதிக்கு நேர்ந்த அதிர்ச்சிச் சம்பவம்

## வாகன ஓட்டுநரின் தகாத செயல் அம்பலத்துக்கு

கனடாவில் ரைடு-ஷேர் சேவையை பயன்படுத்திய இளம் வயது பெண்ணை குறிவைத்து வாகன ஓட்டுநர் ஒருவர் மேற்கொண்டார் எனக் கூறப்படும் தகாத செயல் தற்போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2025 ஜூன் முதலாம் திகதி, கனடாவின் லண்டன் நகரில் டுன்டாஸ் மற்றும் அடிலெய்ட் பகுதியில் இருந்து ஒரு இளம் பெண் ரைடு-ஷேர் செயலி மூலம் பயணத்தைப் பதிவு செய்திருந்தார்.

பயணம் தொடங்கிய சில நேரங்களில், ஓட்டுநர் வழக்கமான பாதையை விட்டு விலகி, வேறும் ஓர் வாகன நிறுத்துமிடத்துக்கு சென்றார் என்சக் கூறப்படுகிறது. அங்கு, அந்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்க் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சம்பவத்திற்குப் பின்னர், பாதிக்கப் பட்டவரை அவரது வீட்டில் இறக்கிவிட்டு சென்ற ஓட்டுநரின் செயலைத் தொடர்ந்து, அந்த பெண் பொலிஸார் தொடர்புகொண்டார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் பெப்ரவரி 10ஆம் திகதி பொலிஸில் சரணடைந்தார்.

பாலியல் துஷ்பிரயோகம், 16 வயதிற்கு குறைந்தவரை பாலியல் தொடுதலுக்கு அழைத்தல் மற்றும் 16 வயதிற்கு குறைந்தவருடன் தகாத தொடர்பு என பல கடுமையான குற்றச்சாட்டுகள் அந்த நபருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டன.




ஆனால் அதிர்ச்சிகரமான முறையில், கைது செய்யப்பட்ட பின்னரும், அவர் தனது விடுதலை நிபந்தனைகளை மீறி, போலியான பெயரில் தொடர்ந்து ரைடு-ஷேர் சேவையில் ஓட்டுநராக செயல்பட்டு வந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இதனால், பெப்ரவரி 24ஆம் திகதி அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். தற்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீண்டும் விடுவிக்கப்பட்ட நிலையில், மார்ச் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளார்.

---

### அமெ. தாக்குதலுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“ஈரான் அணுஆயுதம் பெறுவதைத் தடுக்கவும், அதன் ஆட்சியின் மூலம் உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும் அமெரிக்கா எடுத்த நடவடிக்கைக்கு கனடா ஆதரவு வழங்குகிறது” என பிரதமர் மார்க் கார்னி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த் ஆகியோர் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் நிலையற்ற தன்மைக்கும் பயங்கரவாதத்திற்கும் ஈரானின் இஸ்லாமிய குடியரசே பிரதான காரணம் எனக் கனடா குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், 256 ஈரானிய நிறுவனங்களுக்கும் 222 தனிநபர்களுக்கும் ஏற்கனவே கனடா தடைகள் விதித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரேலின் பாதுகாப்பு உரிமையை கனடா மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அறிக்கை கூறுகிறது.

#### பொய்லிவ்ரே ஆதரவு

கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பியர் பொய்லிவ்ரே, ஈரானின் மத இராணுவ ஆட்சியை முறியடித்து, தங்களது இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் கூட்டணி நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைக்கு தாம் ஆதரவு தெரிவிப்பதாக சமூக ஊடகமான ஓ இல் பதிவிட்டுள்ளார்.

#### தாக்குதலை கண்டிக்கும் NDP

இதே சமயம் புதிய ஜனநாயகக் கட்சியின் (NDP யின்) வெளிநாட்டு விவகார விமர்சகர் அலெக்சாண்டர் புலெரிஸ், ஈரான் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சை கடுமையாகக் கண்டிப்பதாக தெரிவித்தார். இது முழுப் பிராந்தியத்தையும் பெரிய போர் நிலைக்கு இழுத்துச் செல்லக்கூடும் என அவர் எச்சரித்தார்.

ஈரானின் அணுத் திட்டம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அணு சக்தி முகமை வழியாகவே கையாளப்பட வேண்டும் எனவும், கனடா அரசின் ஆதரவு முடிவை NDP ‘கடுமையாக கண்டிக்கிறது’ எனவும் கூறினார்.

#### ஏர் கனடா விமான சேவை ரத்து

தாக்குதல் காரணமாக துபாய்க்கும் துபாயிலிருந்து கனடாவுக்கும் செல்லும் விமான சேவைகளை ஏர் கனடா நிறுவனம் ரத்து செய்துள்ளது. நிலைமையை தொடர்ந்து கண்காணித்து சேவை அட்டவணை மாற்றப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

டொராண்டோ நகரில் உள்ள தூதரக அலுவலகங்கள் மற்றும் வழிபாட்டு தலங்களைச் சுற்றி கூடுதல் காவல் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். சமூக பாதுகாப்பை உறுதி செய்வதே இதன் நோக்கம் எனக் கூறப்பட்டுள்ளது.

ரிச்மண்ட் ஹில்லில் நடைபெறவுள்ள பெரிய போராட்டத்தை முன்னிட்டு, யார்க் பிராந்திய பொலிஸார் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

---

### ட்ரம்பின் அதிரடி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலெக்ஸ் ப்ரெட்டி என்னும் செவிலியர் காப்பாற்ற முயன்றுள்ளார்.

அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள் ட்ரம்பின் அதிகாரிகள்.

அத்துடன், அவருக்கு உள்ளூர் தீவிரவாதி என ட்ரம்ப் நிர்வாகம் பெயரிட, நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் எடுத்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவ, மக்களுக்கு உண்மை புரிந்தது.

ஆக, பலருக்கும் அந்த சம்பவம் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஆக, ட்ரம்பின் நடவடிக்கைகள் பிடிக்காத அமெரிக்க செவிலியர்கள் நூற்றுக்கணக்கானோர் கனடாவை நோக்கித் திரும்பத் துவங்கியுள்ளார்கள்.

குறிப்பாக, கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு, பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் மட்டுமே சுமார் 1,000 அமெரிக்க செவிலியர்கள் பணி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்படி நூற்றுக்கணக்கான அமெரிக்க செவிலியர்கள் கனடாவை நோக்கி படையெடுக்கத் துவங்கியுள்ள நிலையில், உண்மையில், அமெரிக்காவிலேயே 2028 வாக்கில் 270,000க்கும் அதிகமான செவிலியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஆக, ட்ரம்ப் ஆதரவாளர்கள் சிலர் அவரது நிர்வாகத்தை புகழ்ந்துவரும் நிலையில், அமெரிக்காவிலேயே செவிலியர்களுக்கான தேவை இருந்தும், வேலை வாய்ப்புக்கான வழி இருந்தும், அமெரிக்க செவிலியர்கள் கனடாவை நோக்கித் திரும்பி வருவது, ட்ரம்ப் நிர்வாகம் எப்படி உள்ளது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாக உள்ளது.

---

### கனேடியர்களை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில பகுதிகளில் உள்ள கனேடியர்கள் வெளியேறுவது குறித்து பரிசீலிக்குமாறு கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் வலியுறுத்துகிறார்.


மேலும், ஒரு தீவிர மோதலின் போது ஒட்டாவாவின் உதவி வழங்கும் திறன் குறைவாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை பிற்பகுதியில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், பிராந்தியத்தின் சில பகுதிகளில் பாதுகாப்பு நிலைமை ‘கொந்தளிப்பானது மற்றும் கணிக்க முடியாதது’ என்று அனிதா ஆனந்த் கூறினார். மேலும், கனடியர்கள் விழிப்புடன் இருக்கவும், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களைக் கண்காணிக்கவும், உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும், தங்குமிடம் வழங்குவதற்கான எந்தவொரு உத்தரவுகளையும் பின்பற்றவும் அறிவுறுத்தினார்.

வணிகப் போக்குவரத்து வாய்ப்புகள் இன்னும் கிடைக்கும்போது இஸ்ரேல், பாலஸ்தீனம் மற்றும் லெபனானில் உள்ள கனடியர்கள் வெளியேறுவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றும் அறிக்கை கூறுகிறது.

# சமூக ஊடகப் பதிவுகளால் பாகிஸ்தானில் கனேடிய மாணவர் ஒருவர் திடீரென மாயம்

## கைதாகித் தடுப்புக் காவலில் எனப் பின்னர் தகவல்



பாகிஸ்தானில் தனது ஆய்வுக் கட்டுரைக்காக பணிபுரியும் கனேடிய முனைவர் பட்ட மாணவர் ஒருவர் தனது சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.

கனேடிய-பாகிஸ்தான் குடிமகனான ஹம்சா அகமது கான், டிசம்பர் மாதம் பாகிஸ்தானுக்குச் சென்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள லாகூரில் ஜனநாயகத்தை மேம்படுத்துவது குறித்து வெளிநாட்டினரை நேர்காணல் செய்தார்.

ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவரான அகமது கான் வியாழக் கிழமை காலை தனது குடும்பத்தினருடன் ரமழானைக் கழிக்க கராச்சிக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அன்று அதிகாலையில் அவர் யாங்கோ என்ற சவாரி சேவையுடன் பயணம் செய்தபோது மாயமாகியுள்ளார் என நண்பர்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து குடும்ப உறுப்பினர்கள் யாங்கோ செயலியைத் தொடர்பு கொண்டபோது, அகமது கானின் பயணம் பாதியிலேயே ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

அதன் பிறகு, அகமது கான் எங்கிருக்கிறார் என்பது குறித்து குடும்பத்தினருக்கு பல நாள்கள் எந்தப் பதிலும் இல்லாமல் இருந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு பாகிஸ்தான் பத்திரிகையாளர், நாட்டின் தேசிய சைபர் குற்றப் புலனாய்வு முகமை அவரைக் கைது செய்த பின்னர், அந்த மாணவர் சிறையில் இருக்கின்றார் எனத் தகவல் வெளியிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் சட்டத்தரணி அசாத் ஜமால் கூறுகையில் "அகமது கான் கடத்தப்பட்டுள்ளார், அவர் கைது செய்யப்படவில்லை. ஏனெனில் அது சரியான, சட்டப்பூர்வ வழியில் செய்யப்படவில்லை" – என்றார்.

அவர் மீது யார் நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தெரியவில்லை என்றும், உளவுத்துறை அமைப்புகள் இதில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தே கிப்பதாகவும் ஜமால் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தானின் தேசிய சைபர் குற்றப் புலனாய்வு முகமை வெளியிட்டுள்ள உத்தியோகப்பூர்வ அறிக்கையில், அகமது கான் சனிக்கிழமை முதல் காவலில் வைக்கப் பட்டுள்ளார் என்றும், வழக்கமான சைபர் ரோந்துப் பணியின் போது, அவரது ஒ மற்றும் ஐளெவயபசயஅ கணக்குகள் அரசு நிறுவனங்களை குறிவைத்து தவறான தகவல்களை பரப்புகின்றன என்று கண்டறியப்பட்டது எனக் குறிப் பிட்டுள்ளனர்.

இப்படியானப் பதிவுகள் எரிச்சலூட்டும் தன்மை கொண்டவை மற்றும் பொது அமைதியின்மையைத் தூண்டுவதற்கும், விரோதத்தைப் பரப்புவதற்கும், சமூக ஒழுங்கைக் குறைமதிப்பிற்கு உட்படுத்து வதற்கும் வடிவமைக்கப்பட்டன எனத் தெரிகிறது எனவும் அறிக்கையில் குறிப் பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் அரசமைப்பு மற்றும் அரசியல் தலைமையை அவதூறு செய்யவும், அவதூறு பரப்பவும், வெறுப் பைத் தூண்டவும், நாட்டின் ஒருமைப் பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தவும் அகமது கான் அவதூறான கருத்தை பதிவிட்டு வந்தார் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய தீங்கிழைக்கும் கருத்தைப் பரப்புவது குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்துகிறது, மேலும் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பாகிஸ்தான் அரசுக்கு கடுமையான நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. அந்த அறிக்கை அகமது கான் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களையும் பட்டியலிடுகிறது. அவற்றில் இயற்கையாக நபரின் கண்ணியத்திற்கு எதிரான குற்றங்கள், சைபர் ஸ்டாக்கிங் மற்றும் மின்னணு குற்றங்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏமாற்றுதல் ஆகியவை அடங்கும்.

அகமது கானின் ஒ பக்கமானது முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் விடுதலைக்கு பலமுறை தனது ஆதரவைப் பகிர்ந்து கொண்டதைக் காட்டுகிறது. மேலும், பெப்ரவரி 18 அன்று, அவர் காணாமல் போவதற்கு ஒரு நாள் முன்பு, பாகிஸ்தானின் பஞ்சாப் காவல்துறை எட்டு மாதங்களில் 900 பேரைக் கொன்றதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் வெளியிட்டிருந்த ஒரு பதிவை அவர் பகிர்ந்து கொண்டார்.

அதே நாளில், இம்ரான் கான் தனது சுதந்திரத்திற்கு தகுதியானவர் என்றும் அகமது கான் பதிவிட்டுள்ளார்.

ஆனால் அவரது சகோதரர் அவெஸ் அகமது கான், அரசாங்கத்தின் குற்றச் சாட்டுகளை மறுத்து, தனது சகோதரர் சமநிலையானவர் என்றும், அறிவுசார் விவாதத்தில் ஈடுபடுவதற்கான ஒரு வழிமுறையாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார் என்றும் விளக்க மளித்துள்ளார்.

அகமது கான் தற்போது லாகூர் மாவட்ட சிறையில் 2016 ஆம் ஆண்டு நாட்டின் மின்னணு குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நினைத்துப் பார்க்க முடியாத மோசமான நிலைமைகளை தனது சகோதரர் எதிர்கொள்கிறார் என்று அவெஸ் கூறியுள்ளார்.

இதனிடையே, குளோபல் அஃபேர்ஸ் கனடா நிலைமையை அறிந்திருப்பதாகக் கூறியதுடன், தனியுரிமைக் கவலைகள் காரணமாக மேலும் எந்தத் தகவலையும் வழங்க மறுத்துள்ளது




# புலம்பெயர்தல் துறைக்கு கனடாவில் தவறான அமைச்சர் என குற்றச்சாட்டு

கனடாவில் இதுவரை புலம்பெயர்தல் அமைச்சர்களாக பதவி வகித்தவர்களைப் பொறுத்தவரை, தினமும் அவர்களைக் குறித்து ஏதாவது செய்திகள் வெளியாகிக்கொண்டே இருக்கும்.

குறைந்தபட்சம், புலம்பெயர்தல் கட்டுபபாடுகள் குறித்து புலம்பெயர்ந்தோருக்கு பதற்றத்தை உருவாக்கும் வகையில் ஏதாவது அறிவிப்புகளையாவது வெளியிட்டுக்கொண்டிருப்பார்கள் அவர்கள்.

ஆனால், இப்போது கனடாவில் புலம்பெயர்தல் அமைச்சர் யார் என்பதே மற்ற நாடுகளில் உள்ள பலருக்குத் தெரியவில்லை.

ஆக, 'கனடாவின் புலம்பெயர்தல் அமைச்சர் எங்கே?' என்னும் செய்தி கவனம் ஈர்த்துவருகிறது.



இதற்கு முன் கனடாவின் புலம்பெயர்தல் துறை அமைச்சராக இருந்தவர் Marc Miller. அவருக்கு முன், Sean Fraser கனடாவின் புலம்பெயர்தல் துறை அமைச்சராக இருந்தார்.

கனடாவின் தற்போதைய புலம்பெயர்தல் துறை அமைச்சர் பெயர், லினா டியாப் (Lena Metlege Diab). லினா மீது தொடர்ந்து பல அமைப்புகள் குற்றச்சாட்டுகள் முன்வைத்து வருகின்றன.

என்ன குற்றச்சாட்டு? கனடாவின் தற்போதைய புலம்பெயர்தல் துறை அமைச்சரான லினாவை சந்திக்கவே முடியவில்லை என்பதுதான்!

தொண்டு நிறுவனங்களின் இயக்குநர்கள் பலர், லினா கனடாவின் தற்போதைய புலம்பெயர்தல் துறை அமைச்சராக பதவியேற்றதிலிருந்தே அவரை சந்திக்க முயன்று வருகின்றனர் எனவும், ஆனால், அவரை சந்திக்கவே முடியவில்லை என்றும் கூறுகிறார்கள்.

வுஊசுஜ என்னும் தொண்டு நிறுவனத்தின் தலைவரான ஸ்டீபன் (Stephan Reichhold) என்பவர், "என் பதவிக்காலத்தில் 14 புலம்பெயர்தல் அமைச்சர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் எப்போதும் பிஸியாகவே செயல்பட்டார்கள். ஆனால், தற்போதைய அமைச்சரான லினாவைப் பார்க்கவே முடியவில்லை, அவரைக் காணவேயில்லை" என்கிறார்.

அதேபோல, ஐந்து அமைப்புகள் லினாவை சந்திக்க முயன்றன எனவும், ஆனால் அவரைச் சந்திக்க முடியவில்லை என்றும், தாங்கள் வெறுப்படையும் நிலையை அடைந்துள்ளன எனவும் தெரிவிகின்றன.

லினா, ஊடகங்களில் கூட தோன்றுவதில்லையாம். கியூபெக்கில் புலம்பெயர்தல் தொடர்பில் பிரச்சினைகள் நிலவிவரும் நிலையில், அது தொடர்பில் கூட லினாவை ஊடகங்களில் பார்க்க முடியவில்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில், Radio-Canada ஊடகம் லினாவை பேட்டி காண கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால், அதை லினா மறுத்துவிட்டாராம்.

இந்நிலையில், நாடாளுமன்ற கமிட்டி கூட்டத்தில், அகதி நிலை பரிசீலிப்பு காலகட்டம் குறித்து லினாவிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அதற்கு பதிலளிக்க அவர் திணறினார் எனக் கூறப்படுகிறது.

புலம்பெயர்தல் அமைச்சகத்துக்கு, கனடா பிரதமர் மார்க் கார்னி, தவறான நபரை அமைச்சராக தேர்ந்தெடுத்துவிட்டார் என்கிறார்கள் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இப்படி லினா மீது குற்றச்சாட்டு வைத்துள்ளவர்கள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் மட்டுமல்லர், அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே லினா மீது அதிருப்தி தெரிவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.